இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 30-08-2025

# பீகாரில் பீறிடும் மக்கள் சக்தி!

பீகார் மாநிலத்தில் மாபெரும் மக்கள் பிரளயத்தையே உருவாக்கி வருகிறார்கள் ராகுல் காந்தியும், தேஜஸ்வீயும். மக்கள் சக்தியின் மகத்தான எழுச்சியை நேரில் சென்று பார்த்து வாழ்த்திவிட்டு வந்திருக்கிறார் தமிழ் நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

“உங்களை எல்லாம் பார்ப்பதற்காகத்தான் இரண்டாயிரம் கிலோ மீட்டர் கடந்து நான் இங்கே வந்திருக்கிறேன். கடந்த ஒரு மாத காலமாக, இந்தி யாவே பீகாரைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறது. இதுதான் பீகார் மக் களின் பலம்! ராகுல் காந்தியின் பலம்! தேஜஸ்வீயின் பலம்” என்று முதல மைச்சர் அவர்கள் சொன்ன போது கூட்டத்தில் இருந்து கைதட்டல் எழுந்தது.

**“பா.ஜ.க.வின் துரோக அரசியல் தோற்கப் போகிறது. தேர்தலுக்கு முன்பே உங்களின் வெற்றி உறுதியாகிவிட்டது! நீங்கள் இரண்டு பேரும் பீகாரில் பெறப்போகும் வெற்றிதான், இந்தியா கூட்டணியின் அடுத்தடுத்த வெற்றி களுக்கு அடித்தளமாக அமைய இருக்கிறது. பீகார் சட்டமன்றத் தேர்தலில் நீங்கள் வெற்றி பெற்ற பிறகு நடைபெறும் வெற்றிவிழாக் கூட்டத்திலும் நிச்ச யமாக - உறுதியாக நானும் பங்கேற்பேன்”** என்று சொல்லி விட்டு வந்திருக் கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

சட்டமன்றத் தேர்தலுக்குத் தயாராகி வருகிறது பீகார் மாநிலம். அந்த மாநில முதலமைச்சர் நிதிஷ்குமாருக்கு பல்வேறு போக்குக் காட்டி அடக்கி வைத்திருக்கிறது பா.ஜ.க. நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மையை எட்ட முடியாத பா.ஜ.க., நிதிஷ்குமாரின் ஆதரவை வைத்து இப்போது ஆட்சியில் இருக்கிறது. நிதிஷ்குமாரும் - பா.ஜ.க.வும் ஒருவருக்கொருவர் கையை விட்டால் கீழே விழுந்துவிடுவார்கள் என்ற நிலைமையில்தான் இருக்கிறார்கள்.

அதேநேரத்தில் பீகாரில் ராஷ்ட்ரிய ஜனதா தளம் கட்சியைச் சேர்ந்த தேஜஸ்வீக்கான ஆதரவு அதிகமாகி வருகிறது. அவரோடு காங்கிரஸ் தலை வர் ராகுல் காந்தியும் இணைந்து செல்வதால் காங்கிரஸ் - ஆர்.ஜே.டி. கூட் டணிதான் ஆட்சியைப் பிடிக்கும் என்ற கருத்துக்கணிப்புகள் வெளியாகி வருகின்றன. நேரடியாக மக்கள் செல்வாக்கைப் பெற்று மீண்டும் ஆட்சி யைப் பிடிக்க முடியாது என்று நினைக்கும் பா.ஜ.க., குறுக்கு வழியைப் பின்பற்றி வருகிறது. இதற்கு தேர்தல் ஆணையத்தை முழுமையாகப் பயன்படுத்தி வருகிறது.

‘வாக்காளர் அட்டை சீரமைப்பு’ என்ற பெயரால் 65 லட்சம் வாக்காளர் களின் வாக்களிக்கும் உரிமையைப் பறிக்கப் பார்க்கிறார்கள். இதற்கு எதிராக ‘இந்தியா’ கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கடுமையாகப் போராடி வருகிறார்கள். லாலுபிரசாத், ராகுல்காந்தி, தேஜஸ்வீ, பிரியங்கா ஆகியோர் பீகாரில் மக்கள் திரளை திரட்டி வருகிறார்கள்.

தேர்தல் ஆணையத்தை வைத்துக் கொண்டு பா.ஜ.க. எத்தகைய வாக் குத் திருட்டை நடத்துகிறது என்பதை அம்பலப்படுத்தினார் ராகுல் காந்தி. ஒரே ஒரு தொகுதியில் போலி வாக்காளர்கள், இல்லாத முகவரிகள், ஒரே முகவரியில் பதிவு செய்யப்பட்டுள்ள அதிக எண்ணிக்கையிலான வாக்கா ளர்கள், செல்லாத புகைப்படங்கள், படிவம் 6-இன் தவறான பயன்பாடு ஆகி யவற்றால் நடந்துள்ள மோசடிகளை ராகுல் காந்தி அம்பலப்படுத்தினார். இதற்கு முறையான ஒரு பதிலைக் கூட தேர்தல் ஆணையத்தால் சொல்ல முடியவில்லை. பதிலளிக்கத் தயாராக இல்லாத தேர்தல் ஆணையம், ராகுல் காந்தியை மிரட்டிக் கொண்டு இருக்கிறது. 30 நாள் சிறையில் இருந் தால் பதவி போய்விடும் என்று சட்டம் போட்டு மிரட்டிக் கொண்டிருக்கிறார் உள்துறை அமைச்சர் அமித்ஷா.

இவை அனைத்துக்கும் எதிராக மாபெரும் மக்கள் சக்தியைத் திரட்டி வரு கிறார் ராகுல் காந்தி. ‘வாக்காளர் அதிகாரப் பயணம்’ என்ற பயணத்தை பீகா ரில் தொடங்கி உள்ளார்கள் ராகுல் காந்தியும், தேஜஸ்வீயும். இவர்கள் இரு வரும் செல்லும் இடமெல்லாம் மக்கள் அலை அலையாக வந்து கொண்டிருக்கிறார்கள்.

‘நின்றால் மாநாடு, நடந்தால் ஊர்வலம்’ என்று சொல்லத்தக்க வகை யில் தினந்தோறும் காட்சிகள் வந்து கொண்டிருக்கின்றன. தேஜஸ்வீ ஜீப் ஓட்ட அதில் ஏறி வலம் வந்தார் ராகுல் காந்தி. ராகுல் காந்தி - தேஜஸ்வீ பைக் பயணம் போனார்கள். ராகுல் பின்னால் பைக்கில் பிரியங்காவும் அமர்ந்து சென்றார். இவர்களுக்குப் பின்னால் பல்லாயிரக்கணக்கானவர்கள் பைக் கில் சென்றார்கள். பூர்னியா நகரில் வலம் வந்த போது தான் பயணித்த திறந்த வேனில் இருந்து இறங்கிய ராகுல் காந்தி, திடீரென ஹெல்மெட் அணிந்துகொண்டு, பைக்கில் ஏறினார். அவருக்குப் பின்னால் பீகார் காங்கி ரஸ் கமிட்டித் தலைவர் ராஜேஷ் குமார் ஏறிக்கொள்ள, தேஜஸ்வீ யாதவ் தனது பாதுகாப்பாளருடன் மற்றொரு பைக்கை ஓட்டினார். இவை இரண்டு கட்சித் தொண்டர்களையும் உற்சாகம் அடைய வைத்துள்ளது. இரண்டு மாபெரும் கட்சிகளின் கூட்டு, மக்களுக்கான பெரிய ஈர்ப்பாக அமைந்துள் ளது.

**“தேர்தல் ஆணையத்தின் உதவியுடன் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் என்ற பெயரில் ஏழைகளின் வாக்குகளைத் திருட பா.ஜ.க. விரும்புகிறது. பீகாரில் இது நடக்க, ‘இந்தியா’ கூட்டணி அனுமதிக்காது. அரசியலமைப்பு நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் சம உரிமைகளை உறுதி செய்கிறது. ஆனாலும் சிறப்பு தீவிர திருத்தம் அரசியலமைப்புக்கு எதிரானது. சட்டசபைத் தேர்தலில் பா.ஜ.க. மற்றும் அதன் கூட்டாளிகளுக்கு பீகார் மக்கள் தகுந்த பதிலடி கொடுப்பார்கள்”** என்று பேசி வருகிறார் ராகுல்.

“உங்கள் வாக்குகளை மட்டும் பறிக்க நினைப்பதாகக் கருதாதீர்கள். உங்கள் இருப்பையே பறிக்க நினைக்கிறார்கள்” என்று தேஜஸ்வீ சொல்லி வருகிறார். ஜனநாயகமும், தேர்தல் முறையும் பா.ஜ.க.வால் சீரழிக்கப்பட்டு வருவதை அம்பலப்படுத்துவதாக இருக்கிறது இவர்கள் இருவரது உரையும்.

“ராகுலின் பயணம் இத்தனை ஈர்ப்புக்குரியதாக இருக்கும் என்று நாங்கள் நினைக்கவில்லை. இது பா.ஜ.க.வின் பலவீனத்தையே காட்டு கிறது” என்று பா.ஜ.க.வினர் சிலர் இந்தி ஊடகங்களில் பேட்டி அளித்ததாகச் செய்தி வெளியாகி உள்ளது.

16 நாட்கள் நடைபெறும் இந்தப் பயணம், 20 மாவட்டங்களில் 1,300 கிலோமீட்டருக்கும் மேல் பயணம் செய்து பாட்னாவில் நிறைவடைய உள்ளது. இந்தியாவின் மிக முக்கிய அரசியல் கட்சித் தலைவர்கள், மாநில முதலமைச்சர்கள் பங்கேற்கிறார்கள். பீகாருக்கான எழுச்சியாக மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்தியாவுக்கான எழுச்சியாகவும் மாறிக் கொண்டிருக்கிறது.

## சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பப்படும்

# மசோதாக்களுக்கு நீண்ட நாட்கள் ஒப்புதல் அளிக்காமல் இருப்பதை ஏற்க முடியாது!

## உச்சநீதிமன்றம் திட்டவட்டம்!



**புதுடெல்லி, ஆக. 30 - சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்கள் மீது நீண்ட நாட்கள் ஒப்புதல் அளிக்காமல் இருப்பதை ஏற்க முடியாது என்று, உச்சநீதிமன்றம் குடியரசுத்தலைவர் கேள்வி எழுப்பிய வழக்கில் திட்ட வட்டமாக தெரிவித்துள்ளது.**

மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்குவதற்கான காலநிர்ணயம் செய்ததற்கு எதிராக குடியரசு தலைவர் மூலம் கேள்வி எழுப்பிய வழக்கு, உச்சநீதி மன்றத்தில் நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தது. ஒன்றிய அரசு சார்பில் ஆஜரான சொலி சிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்கும் விவகாரங்க ளில் நீதிமன்றம் எந்த அளவுக்கு உத்தரவிட்டாலும், அது சட்டப்படி யானதா என்பது குறித்து ஆய்வு செய்ய வேண்டும் என்றும், இதற்கு குடியரசு தலைவர் விளக்கம் கேட்க தாகவும் தெரிவித்தார்.

ஒன்றிய அரசின் வாதத் தின்போது குறுக்கிட்ட நீதிபதி கள், சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள் மீது எவ்வளவு நாட்கள் ஒப்புதல் வழங்காமல் இருக்க முடியும், அதற்கான பதில் என்ன? இதில் ஒன்றிய அரசின் பதில் என்ன? அரசியல் சாசன சபை விவாதத்தில் 6 வாரங்களில் ஆளுநர் முடிவு எடுக்க வேண்டும் என்றே விவாதிக்கப்பட்டது. பின்னர் as soon as என்று மாற்றப்பட்டது. உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என் பதே அதன் நோக்கம் என்று உறுப்பினர் தெரிவித்தார்.

அப்படியானால் As Soon as என்பதற்கு 6 வாரங்களுக்கு மேல் நீடிக்க கூடாது என்பதுதான் அர்த்தம் என்றும், அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களின் முடிவை எதிர்பார்ப்பை நாம் புறக்கணிக்க முடியுமா? என்றும் உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பி யது. ஆளுநர்கள் ஆறு மாதம், ஒரு வருடம் என்று மசோதாக்கள் மீது முடிவெடுக்காமல் இருப்பதை நியாயப்படுத்த முடியாது என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர். நீதி மன்றம் ஆளுநரிடம் பதில் கேட்பதில் தவறில்லை. ஆளுநர் ஒன்றிய அரசை பிரதிநிதித்துவ படுத்துபவர் இல்லை என்ற ஒன்றிய அரசின் வாதத்தை ஏற்க முடியாது என்றும் நீதிபதிகள் தெரி வித்தனர். ஆளுநர் ஒன்றிய அரசின் பிரதிநிதி தான் அவரிடம் அதிகாரத்தை ஒன்றிய அரசுதான் ஒப்படைத்துள்ளது என்றும் நீதிபதி கள் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் வாதத்தை மூத்த வழக்கறிஞர் அபிஷேக் சிங்வி தொடங்கினார். ஆளு நருக்கு தனி விருப்ப உரிமை இல்லை என்று தெரிவித்த அபிஷேக் சிங்வி, எந்த மசோதா மீதும் முடிவெடுக்க ஆளுநருக்கு மூன்று வழிகள் மட்டுமே உள்ளன என்று கூறினார். மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்க விரும்பவில்லை என்றால் அதனை திருப்பி அனுப்பி லாம், அல்லது குடியரசுத் தலை வருக்கு அனுப்பலாம், அதனை தாண்டி எந்த முடிவும் எடுக்க முடியாது என்று தமிழ்நாடு அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆளுநருக்கு எந்த சுதந்திரமான விருப்ப உரிமையும் இல்லை என்றும், குடியரசுத் தலைவரும் ஆளுநரும் பெயரளவிலான தலை வர்கள், ஒரு சில விவகாரங்களை தவிர நிர்வாக ரீதியாக முடி வெடுப்பதில் எந்த விருப்ப உரி மையும் இல்லை என்றும் அமைச்சரவை முடிவுக்கு அவர்கள் கட்டுப்பட்டவர்கள் என்றும் அபிஷேக் சிங்வி வாதிட்டார்.

## பா.ஜ.க. முன்னாள் தலைவர் தொடர்ந்த அவதூறு வழக்கு!

# கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு, எம்.பி. - நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி ஆதாரங்களை வழங்கினார்!

சென்னை, ஆக. 30 - பா.ஜ.க. முன்னாள் தலைவர் அண்ணா மலை மீது தொடரப்பட்ட அவதூறு வழக்கில், திமுக பொருளாளர் டி.ஆர். பாலு நீதிமன்றத்தில் ஆஜராகி தனது தரப்பிலான ஆதா ரங்களை வழங்கினார்.

பா.ஜ.க. முன்னாள் மாநிலத் தலைவர் அண் ணாமலை DMK files என்ற பெயரில் தி.மு.க. மீதும், தம் மீதும் பொய் யான கருத்துக்களை தெரி விக்கப்பட்டுள்ளதாகக் கூறி, அண்ணாமலை மீது நாடாளுமன்ற உறுப் பினரும், தி.மு.க. பொரு ளாளருமான டி.ஆர்.பாலு சைதாப்பேட்டை நீதிமன் றத்தில் அவதூறு வழக் குத் தொடர்ந்திருந்தார்.

இதுகுறித்து, அவர் தொடர்ந்த வழக்கில், உரிய ஆதாரங்கள் இன்றி தனது பெயருக்கு தீங்கிழைக்கும் நோக் கில், அண்ணாமலை அவதூறு கருத்துக்க ளைப் பரப்பி வருவதாகக் கூறப்பட்டிருந்தது.



இந்த நிலையில் கடந்த ஜூலை 17ம் தேதி வழக்கு விசாரணைக்காக அண் ணாமலை சைதாப் பேட்டை நீதிமன்றத்தில் ஆஜரானார். ஆனால், டி.ஆர்.பாலு ஆஜராக வில்லை. எனவே, இந்த வழக்கின் அடுத்தக்கட்ட விசாரணை ஆகஸ்ட் 28 ஆம் தேதி நடைபெறும் நீதிபதி வழக்கை ஒத்தி வைத்தார்.

இந்த வழக்கின் விசா ரணை நேற்று முன்தினம் நீதிமன்றத்திற்கு வந்தது. அப்போது டி.ஆர்.பாலு, நேரில் ஆஜராகி தனது தரப்பில் உள்ள ஆதாரங் களை வழங்கினார்.

இதனையடுத்து செய்தி யாளர்களிடம் பேசிய அவர், நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி, ஒன் றரை மணி நேரம் விளக் கம் அளித்ததாகவும், வழக்கின் அடுத்த விசா ரணை செப்டம்பர் 22ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக வும் தெரிவித்தார்.

## திருமதி. துர்கா ஸ்டாலின் எழுதிய

# ‘அவரும் நானும்’ நூல் - பெங்களூரில் அறிமுக விழா!

பெங்களூர், ஆக.30 - தி.மு.க. தலைவர் - தமிழ் நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் துணைவியார் திருமதி துர்கா ஸ்டாலின் அவர்கள் எழுதிய ‘அவரும் நானும்’ என்ற நூலின் இரண்டாம் பாகம் அறிமுக விழா கர்நாடக மாநில தி.மு.க. இலக் கிய அணி சார்பில் நடைபெறுகி றது.

செப்டம்பர் மாதம் 21-ஆம் தேதி காலை 10 மணியளவில் பெங்களூர் குயின்ஸ் ரோட்டில் உள்ள அக்ரிகல்சர் வேளாண் கழக அரங்கத்தில் இந்த விழா நடைபெற உள்ளது.

டாக்டர் ஜெயராஜ முரளி அறி முக உரை ஆற்றுகிறார். தலை மைக் கழக இலக்கிய அணி தலைவர் அன்வர் ராஜா, தலைமை கழக இலக்கிய அணி செயலாளர் வி.பி.கலைராஜன், தலைமைக் கழக இலக்கிய அணி பொருளாளர் சந்திரபாபு, தலைமை கழக இலக்கிய அணி முன்னாள் தலைவர் - மறைந்த புலவர் இந்திர குமாரியின் மகள் லேகா இந்திரகுமாரி, செங்கை சண்முகம் ஆகியோர் வாழ்த் துரை வழங்குகின்றனர்.

முதல்10 சிறப்பு புத்தகங்களை க.முருகன், மதுசூதன பாபு, கார்த்திகேயன், ஹரிஹரன் பெற்றுக் கொள்கின்றனர். இந்த விழாவிற்கு கர்நாடக மாநில தி. மு.க. இலக்கிய அணி தலைவர் போர் முரசு கதிரவன் தலைமை தாங்குகிறார். கர்நாடக மாநில தி.மு.க. அமைப்பாளர் ந.ராம சாமி முன்னிலை வகிக்கிறார்.

கர்நாடக மாநில தமிழ் பத்திரி கையாளர்கள் சங்க தலைவர் முத்து மணி நன்னன் வரவேற் புரை ஆற்றுகிறார். பெங்களூர் பாவலர் ப.மூர்த்தி நன்றி உரை ஆற்றுகிறார்.

இந்த விழாவில் கழக உடன் பிறப்புகள், நிர்வாகிகள் அனைவ ரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## இந்திய அளவில் சராசரியாக 99 டாக்டர்களே உள்ளனர்!

# தமிழ்நாட்டில் ஒரு லட்சம் மக்களுக்கு 194 டாக்டர்கள்!

## புள்ளி விவரங்களில் பெருமிதத் தகவல்!

**சென்னை, ஆக.30- இந்தியாவில் சராசரியாக ஒரு லட்சம் மக்களுக்கு 99 டாக்டர்க ளும், தமிழ் நாட்டில் 194 டாக்டர்க ளும் இருக்கிறார்கள் என்ற புள்ளி விவரங்கள் கிடைத்திருக்கின்றன.**

**நாட்டின் சுகாதார கட்டமைப்பில் டாக்டர்களின் பங்கு மிகமுக்கிய மானது. அவர்கள் மக்களின் ஆரோக்கியத்தை பாதுகாப்பதற் கும், பெருகி வரும் நோய்களைத் தடுப்பதற்கும், அதற்கான சிகிச்சை களை மேற்கொள்வதற்கும் மற்றும் சமூகத்தின் ஒட்டுமொத்த நல வாழ்வை மேம்படுத்துவதற்கும் முதுகெலும்பாக இருக்கின்றனர்.**

அதிலும் குறிப்பாக தொற்று நோய்களை கட்டுப்படுத்துதல், தொற்று கண்காணிப்பு மற்றும் அதற்கான சுகாதார கொள்கை களை வகுப்பதில் டாக்டர்கள் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்க ளுடன் இணைந்து தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர். அந்த வகையில் கடந்த 2020ம் ஆண்டு ஒட்டுமொத்த உலகத்தை யும் உலுக்கி எடுத்த கொரோனா தொற்று காலத்தில் டாக்டர்கள் உள்ளிட்ட சுகாதார கட்டமைப்பில் அங்கம் வகித்தவர்கள் பலரையும் அனைத்து மக்களும் கடவுளா கவே பார்த்தனர்.

**சுகாதார கட்டமைப்பின் மையப் புள்ளி!**

சுகாதார கட்டமைப்பின் மையப்புள்ளியாக பார்க்கப்படும் டாக்டர்கள், இந்தியாவில் அரசு மற்றும் தனியார்துறைகளில் தங் கள் பங்களிப்பு மூலம் மக்களுக்கு தரமான மருத்துவ சேவையை உறுதி செய்து வருகிறார்கள். இருந்தபோதிலும், அதிகரித்து வரும் மக்கள் தொகை காரணத்தி னால், போதிய டாக்டர்கள் எண் ணிக்கை இல்லாதது ஒரு கவலை யளிக்கும் செய்தியாகவே உள்ளது.

**மாநிலங்களின் டாக்டர்களின் எண்ணிக்கை!**

அதன்படி, கடந்த ஆண்டு (2024) அக்டோபர் மாதம் வரை யிலான ஆதார் அடிப்படையிலான மக்கள் தொகை புள்ளி விவரங்களின் அடிப்படையில், இந்தியாவில் சராசரியாக ஒரு லட் சம் மக்களுக்கு பதிவு செய்யப்பட்ட 99 டாக்டர்கள் இருப்பதாக தெரிய வந்துள்ளன. இந்தியாவில் ஒவ் வொரு மாநிலங்களிலும் இருக் கும் மக்கள் தொகை அடிப்படை யில், ஒரு லட்சம் மக்களுக்கு எவ்வளவு டாக்டர்கள் இருக்கிறார் கள் என்ற விவரங்களும் வெளியாகியுள்ளது.

அந்த வகையில் தமிழ்நாட்டில் ஒருலட்சம் மக்களுக்கு 194 டாக் டர்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட் டுள்ளது. இந்த மாநிலங்களின் பட் டியலில் ஒரு லட்சம் மக்களுக்கு கோவாவில் 298 டாக்டர்களும், கர்நாடகாவில் 207 டாக்டர்களும், கேரளாவில் 203 டாக்டர்களும், ஆந்திராவில் 198 டாக்டர்களும், பஞ்சாப்பில் 173 டாக்டர்களும், மராட்டியத்தில் 164 டாக்டர்களும், டெல்லியில் 148 டாக்டர்களும், ஜம்மு காஷ்மீரில் 137 டாக்டர்க ளும், குஜராத்தில் 109 டாக்டர்க ளும், அருணாசல பிரதேசத்தில் 105 டாக்டர்களும் இருக்கின்ற னர். மற்ற மாநிலங்களின் ஒரு லட் சம் மக்களுக்கு இரட்டை இலக்கத் தில் டாக்டர்களின் எண்ணிக்கை இருக்கிறது.